

16-2

## Jesus Stills the Storm

## இயேசு புயலை அடக்குதல்

## மத்தேயு 8 : 23–27

இயேசுவினுடைய சீஷர்கள் பெரும்பாலும் எல்லாரும் மீன்பிடிக்கிறத் தொழிலை செய்பவர்களாயிருந்தை படியினால் ஒரு படகை எப்படி கையாள வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும். ஆனால் ஒருமுறை புயற்காற்று அவர்கள் மேல் வந்தது; அவர்கள் அந்த படகை செலுத்த முடியவில்லை. இயேசு மிகவும் களைப்பாயிருந்த படியினால் அவர் அந்த படகின் பின்னநியத்திற்கு சென்று நித்திரையாயிருந்தார். படகு மூழ்கிப் போகத்தக்கதாக பெரும் அலைகளினால் மூடப்பட்டது. படகு மூழ்கிப்போகும் என்று சீஷர்கள் நினைத்தார்கள். அவர்கள் இயேசுவினிடம் சென்று “ஆண்டவரே எங்களை இரட்சியும், நாங்கள் மூழ்கி மடிந்து போகிறோம்” என்று சொன்னார்கள். “ஏன் பயப்படுகிறீர்கள்? நான் உங்களுடன் கூட படகில் இருக்கிறேன்; நான் உங்களை பராமரித்து பாதுகாப்பேன் என்ற விசுவாசம் ஏன் உங்களுக்கு இல்லாமற் போயிற்று? பிறகு, காற்றும், கடலும் அமைதலாயிருக்கும் படி சொன்னார். அமைதல் உண்டாயிர்று. அங்கே அலைகள் இல்லை. மிகுந்த அமைதலுண்டாயிற்று. அந்த படவில் இருந்த சீஷர்கள் இயேசு படகில் இருக்கிறார். பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதை அறிந்தனர்.

## ஜெபம்

இயேசுவே, நீர் எங்களை பராமரித்து கவனித்துக்கொள்பவர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். உம்முடை பரிசுத்த தூதர்கள் எங்களோடு கூட இருந்து எங்களை எல்லா அபாயத்திற்கும் நீங்கலாக்கி பாதுகாக்கின்றனர். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

## வளர்ந்த பிள்ளைகளுக்குரிய வேதாகம மனப்பாடப் பகுதி வசனம்

## லூக்கா 8 : 25

“இவர் யாரோ, காற்றுக்கும், ஜலத்திற்கும், கட்டளையிடுறாரே, அலைகளும் இவருக்கு கீழ்படிகிறதே”